மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கேட்கிற கேள்வியைப் பொறுத்துத்தான் நாங்கள் பதில்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மதுராந்தகம் ஆறுமுகம் போன்றவர்கள் ஆற்றுகின்ற உரை எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் கேள்வி நேரத்தின்போது சுருக்கமாகப் பதில் கூறவேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ எட்மண்ட் : துணைக் கேள்விகள் கேட்கிறவர்கள் ஒரு நேரத்தில் ஒரு கேள்விதான் போட வேண்டுமென்று தாங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட துணைக் கேள்விகளை இரண்டு பக்கங்களிலுமுள்ள உறுப்பினர்கள் கேட்கிறார்கள். அப்படிக் கேட்கிறபோது அமைச்சர்கள் அவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்பதை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கிட்டப்பா போன்றவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று துணைக் கேள்விகளைக் கேட்பது வழக்கமாக இருக்கிறது. ஓர் உறுப்பினர் ஒரு சமயத்தில் ஒரு துணைக்கேள்விதான் கேட்க வேண்டும். அமைச்சர்களும் சுருக்கமாகப் பதில் கூற வேண்டும். துணைக் கேள்விகளும் மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும். அதற்கு அப்பால் போய் துணைக் கேள்விகள் கேட்பதால் நேரம் வீணாகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : பாலாறு—பொருந்தலாறு அணை கட்டப்பட்டு அதிலிருந்து வெட்டப்படுகிற வாய்க்கால் பகுதியிலுள்ள மேட்டு நிலங்களில் கிணறுகளை வெட்டி ஆயில் எஞ்சின் மோட்டார் வைத்து தண்ணீரைத் திருடுவதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? அரசு அதன்மீது நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதற்கு என்னுடைய சுருக்கமான பதில்—புகார் வரவில்லை.

செஞ்சி மருத்துவ மனை

*வினா எண். 235.—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை பிரிவு ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

1979 மார்ச் 5]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ)&(ஆ) செஞ்சியிலுள்ள அரசு மருத்துவ மனையில் ஆறு படுக்கைகளுடன் கூடிய பகுதியும் ஒரு அறுவை அரங்கமும் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, செஞ்சியிலே உள்ள மருத்துவ மனை செஞ்சி வட்ட தலைமை யகமாக உள்ள மருத்துவ மனை. அந்தக் கட்டிடங்கள் மிக மோசமாகப் பழுதடைந்திருக்கின்றன. அதைப் பழுதுபார்க்க உத்தேசம் உண்டா ? அது எப்பொழுது நடைபெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, செஞ்சியில் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டி டிருக்கிற அந்த அறுவை சிகிச்சைக் கூடம் புதிதாகக் கட்டப் பட்டு 1978-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 30-ம் நாள் அன்று தான் ஒப்படைக்கப்பட்டது. ஆகவே, புதிய கட்டிடத்தில் தான் அறுவை அரங்கம் செயல்பட்டு வருகிறது.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, அரசாங்க மருத்துவ மனைகள் பல இடங்களிலே இருந்தும் ஆப்ரே ஷன் தியேட்டரும் எக்ஸ்ரே வசதியும் இல்லாத காரணத்தாலே, குறிப்பாக, திருத்தணியிலே, உள்ள பெரிய ஆஸ்பத்திரி அதிக மாகச் செலவழித்துக் கட்டப்பட்டிருந்தும், அங்கே எக்ஸ்ரே எடுக்க வசதியில்லாத காரணத்தாலே, நோயாளிகள் காஞ்சீ புரம் வர வேண்டியுள்ளது. இதனால் இடையிலே சிலர் உயி ரிழக்க நேரிடுகிறது. ஆகவே, அம்மாதிரி மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே வசதியும் ஆப்ரேஷன் தியேட்டர் வசதியும் கட்டாயமாக செய்து தரப்படுமா என்று அறிய விருப்புகிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அனைத்துப் பகுதியிலே உள்ள மக்கள் நுண் கதிர் இயக்கப் படம் பெறுகின்ற வாய்ப்பையும் அறுவை சிகிச்சை பெறுகின்ற வாய்ப்பையும் பெற மக்களுடைய உயிரைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வாலே இந்த அரசு அதற் குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.